தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

*******

ஆணை எண்.102/மா/2021
நாள். 07.12.2021

A.P. சுப்பிரமணியன்,
நாகர்கோவில் – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
நாகர்கோவில் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

நாகர்கோவில் மாநகராட்சி, கோட்டூர், 50, கருப்பன் செட்டியார் தெருவில் வசிக்கும் திரு A.P. சுப்பிரமணியன், என்பவரது 04.03.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.03.2021–ல் பெறப்பட்டு 102/2021 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாகர்கோவில் மாநகராட்சி, கோட்டூர் கருப்பன் செட்டியார் தெருவில் வசிக்கும் திரு A.P. சுப்பிரமணியன் என்பவர் தன்னுடைய முறையீட்டு மனுவில், எனது தெரு மிகவும் குறுகலான தெரு, இந்த குறுகிய தெருவில் ஷேர் ஆட்டோ போன்ற வாகனங்கள் நிறுத்தி மிகுந்த இடைஞ்சல் செய்து வருவதால் இப்பொருள் தொடர்பாக போலீஸ், மாவட்ட ஆட்சியர், தமிழ்நாடு தீயனைப்புத் துறை, மாசு கட்டுப்பாட்டு வாரியம் போன்றவற்றிற்கு புகார்கள் அளித்துள்ளேன். மாநகராட்சி அலுவலருக்கும் புகார் அளித்துள்ளேன். என்னுடைய தெருவில் கல்தூன் டிவைடர் (Divider) மீண்டும் நிறுவ நாகர்கோவில் நகராட்சி ஆணையாளருக்கு உத்தரவிட கோருகிறேன் என்று தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆணையர் நாகர்கோவில் மாநகராட்சி ஆகியோரை 11.11.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.11.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. முறையீட்டு மனுதாரர் 11.11.2021 அன்றைய கன்னியாகுமரி முகாம் நேரடி விசாரணையில் கலந்து கொண்டு தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார். முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் " மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் எனது தெருவில் குத்துக்கல் அமைக்க மாநகராட்சி அலுவலர்களை பலமுறை தொடர்பு கொண்டபோது அவர்கள் எனது மனுவினை பரிசீலிக்காமல் பலமுறை நிராகரித்துள்ளனர். மிகவும் குறுகலான தெருவாக உள்ள எனது தெருவில் மொத்தம் 20 வீடுகள் அமைந்துள்ளன. குறுகிய மேற்கண்ட சந்தில் ஆட்டோ போன்ற வாகனங்கள் எனது வீட்டிற்கு அருகிலும் மற்ற இடங்களிலும் நிறுத்தி மிகுந்த இடைஞ்சல் செய்து வருவதால், மேற்கண்ட தெருவில் குத்துக்கல் அமைத்திட மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. நாகர்கோவில் மாகராட்சி நகரமைப்பு அலுவலர் 11.11.2021 விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" மனுதாரர் திரு. சுப்பிரமணி என்பவர் தான் வசிக்கும் தெருவில் குத்துக்கல் ஒன்றை நடுவதற்கு மாநகராட்சி அலுவலகத்திற்கு மனுக்களை அனுப்பியுள்ளார். குறுகலான மேற்கண்ட சந்து மிகவும் குறுகலாக இருப்பதால், மனுதாரரின் விருப்பப்படி அவர் வசிக்கும் சந்தில் குத்துக்கல் அமைத்திட விதிகளில் வழிவகை இல்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக நாகர்கோவில் ஆணையரின் 09.11.2021 நாளிட்ட அறிக்கையினை எனது மேல் விளக்கமாக பதிவு செய்திடுமாறும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

5. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளர் தனது 26.03.2021 நாளிட்ட அறிக்கையில் கோட்டார், கருப்பன் செட்டித்தெரு ஆரம்பிக்கும் முகப்பு இடத்தில் வண்டிகள் (Load Autos) செல்லக்கூடாது எனவும், எனவே குத்துக்கல் அமைத்து தருமாறு மனு அனுப்பியுள்ளார். மனுவின் மீது நடவடிக்கை மேற்கொண்டு குத்துக்கல் அமைக்க செல்லும் போது ஊர்பொதுமக்கள் குத்துக்கல் அமைக்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே குத்துக்கல் அமைக்க இயலாது என தெரிவித்து திரு. A.P.சுப்பிரமணியன் அவர்களுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

6. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நாகர்கோவில் மாநகராட்சி நகரமைப்பு

அலுவலரின் வாக்குமூலம் ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

7. முறையீட்டு மனுதாரர் வசிக்கும் தெரு மிகவும் குறுகலாக இருப்பதால் அவர் வசிக்கும் சந்தில் குத்துக்கல் அமைத்திட விதிகளில் வழிவகை இல்லை என்பதை நாகர்கோவில் மாநகராட்சி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகின்றது. மேலும் ஊர்பொதுமக்கள், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் வழக்கறிஞர்களும் குத்துக்கல் அமைக்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்தனர் என்பதை ஆணையர் நாகர்கோவில் மாநகராட்சி, மனுதாரருக்கு அனுப்பிய 19.03.2021 அறிவிப்பிலிருந்து அறியமுடிகின்றது. மேலும் விதிமுறைகளின் அடிப்படையில் குத்துக்கல் அமைக்க அனுமதி வழங்க வழிவகை இல்லை என்ற விவரமும் முறையீட்டு மனுதாரருக்கு மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நேர்வில் ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று இம்மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 07ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு A.P. சுப்பிரமணியன்,
எண்.50, கருப்பன் செட்டியார் தெரு,
கோட்டார்,
நாகர்கோவில் – 629002.

ஆணையாளர்,
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில்.

நகல்.

முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

07/12/21.

செயலாளர்